அசல்

[ஆகஸ்டு 4ம் தேதி
1898]

சொ. வேதாசலம்.

அசல் – 1

நான் பார்க்க வேண்டும்
பார்த்தேன்

உ
ஸ்ரீசிற்றம்பலம்.

சென்னை:
ஆகஸ்டுமீ ௪

அன்புள்ள ஐயா!

உபயக்ஷேமம்.

தாங்களிங்கே வந்திருந்தபோது
நான் கொடிய வயிற்றுளைவு நோயாலியங்க
வலியற்று வருந்திக் கொண்டிருந்தமையால்,
தங்களை வந்து காணுதற்கு நேராமற் போயிற்று.
'மணிமேகலை' முற்றுப் பெற்றதும் பிறவும் ஸ்ரீ.
சூரியநாராயண சாஸ்திரியார் தெரிவிக்க
மகிழ்வடைந்தேன். அச்சாஸ்திரியாருக்கும்
நேற்று ஒரு காப்பி கிடைத்தது. எனது சம்பளம்
செலவாய்ப் போன சமயமாயிருத்தலால்,
இப்போது கைப்பணங் கொடுத்து அப்புத்தகம்
வாங்குதற்குச் சக்தியற்றவனாயிருக்கிறேன்.
ஆதலால், தாங்கள் அன்பு கூர்ந்து இப்போது
ஒரு புத்தகம் உதவி செய்தால் அதன் விலையை
அடுத்த மாதத்தில் தங்களுக்கு அனுப்பிவிடு
வேன். தங்கள் தேக சௌக்கியத்தைத் தெரிவிக்
கும்படி வேண்டுகிறேன். தாங்கள் 'அகநானூறு'
பதிப்பித்தால் மிகவும் நலமுடையதாயிருக்கும். பி
றர் பதிப்பதாயிருந்தால், தாங்கள் 'நற்றிணை'
யாவது 'உதயணன் காதை'யாவது பதிப்பித்தால்
நன்று. தாங்களினிப் பதிப்பித்தற்கு விரும்பி மேற்
கொண்ட நூற்பெயர் தெரிவிக்குமாறு வேண்டு
கிறேன். நமஸ்காரம்.

அடியேன்,
சொ. வேதாசலம்
தமிழ்ப்பண்டிதன், கிறிஸ்டியன் காலேஜ்.

H-9

அசல்

[ஆகஸ்டு 4ம் தேதி
1898]

சொ. வேதாசலம்.

அசல் - 1

நான் பார்க்க வேண்டும்
பார்த்தேன்



EAST INDIA POST CARD

THE ADDRESS ONLY TO BE WRITTEN ON THIS SIDE.

MADRAS 5 AU.98 12 PM

M. R. Ry.
V. Swaminatha Iyer avergal
Tamil Pandit,
Kumbakonam College,
Kumbakonam

KUMBAKONAM DELIV. 6 AU